www.padippakam.com



# அருவி

ARUVI

உலகினைப் புரட்டியோர்
புதுவாழ்வு படைத்திட
எழுதுகோல் இங்கோர்
நெம்புகோல் ஆகட்டும் !

ஜனவரி - பெப்ரவரி 97



## விடிவுக்காக

ஆர்த்தெ ழுந்துகை கோத்துச் செல்லடா
அக்ர மங்களை வெல்லடா
கூர்த்த வாளினைக் கையிலேந்தடா
குருதி யாற்றினினில் நீந்தடா
போர்தொ டுத்துநம் வீர வாழ்க்கையைப்
பொன்னெழுத்தினால் பொறியடா
யார்த டுப்பினும் வெற்றி காண்பதில்
ஆக்க மோடுபோ ராடடா!

இமய மேட்டினில் கொடியை நாட்டியோர்
இனிய வாழ்க்கையை எண்ணடா
அமைய வேண்டுமோர் 'ஈழ' நாட்டினை
அன்பு கூர்ந்துநீ பாரடா
சமழு கின்றநம் தமிழ ராட்சியைக்
காண்ப தற்குமுன் செல்லடா
உமது வீரமும் உமது சேவையும்
உலகி னுக்குநீ காட்டடா!

தமிழனுக்குமோர் நாடு செய்வதில்
தலைநி மிர்ந்துத் நில்லடா
குமிழு மாசைகள் நிறைவு கண்டிடக்
கொடிய வர்களைத் தாக்கடா
அமித மானநம் சோத ரர்களை
அக்னியில் சுட்டெ ரித்தவர்
திமிரு காட்டிடக் கண்டு நம்மனஞ்
சீற வில்லையா கூறடா!

படைதி ரட்டுவோம் பகையை வெல்லுவோம்
பறைமு ழக்கிநாம் செல்லுவோம்
கடமை யோடுநம் தமிழர்கட்கனைக்
கடல்க டந்துபோர் செய்குவோம்
இடர கற்றுவோம் ஈழ நாட்டினை
ஈட்டு நம்கொடியை நாட்டுவோம்
விடியு கின்றதோர் நாளையே நமது
வெற்றி யென்றுபுகழ் பாடுவோம்!

படிப்பகம்

www.padippakam.com



# அருவி

[illegible] TAMAN SRI [illegible]
72100 BAHAU
NEGERI SEMBILAN
MALAYSIA

ஜனவரி- பெப்ரவரி 97

நன்கொடை ம.ரி. 1.50

ஆசிரியர் குழு :


சி.அருண்
கணபதி கணேசன்
வே.சுந்தரராசு
ஏ.தேவராசன்

மரபுக்கவிதை பொறுப்பு :

பாநெறிப்பாவலர் டாக்டர் டி.வி.ஆர்.பி

படிப்பகம்

www.padippakam.com



அருவி தவழ்கிறது !
தத்தி தத்தி நடைபோடுகிறது
ஏதோ வெளியிட்டோம் - எதையோ வெளியிட்டோம் என்பது நோக்கமல்ல
சற்று கால தாமதமாக வெளிவந்தாலும்
படைப்பின் தரம் உயர வேண்டும் என்பதே நோக்கம்
நல்ல படைப்புகளுக்காகக் காத்திருக்க வேண்டிய சூழலுக்கு
உட்படுத்தப்பட்டுள்ளோம்.

படைப்பாளர்கள் படைப்பது ஒரு கொள்கை - நோக்கம் என்பதை மறந்து
ஓய்வு நேர பொழுதுபோக்கே படைப்பது என்ற நிலையில் இருக்கிறார்கள்
எப்போது ஓய்வு கிடைக்கின்றதோ அப்போது படைக்கிறார்கள்
காலம் கனிய வேண்டும்!

படைப்பாளர்கள் இறைமைக் கொள்கையோடு எழுத வேண்டும்.
படைப்பது ஓர் அறச் செயல் என்பதை உணர வேண்டும்.
படைக்கும் செயல் எல்லாராலும் இயலாது
இயன்றவர்கள் படைப்புச் செயலை அறம் சார்ந்ததாக உருவாக்க வேண்டும்
அருவி அறம் போற்றி வரும் - இறைமைக் காக்கும்.

அன்புடன்,
ஆசிரியர் குழுவினர்

படிப்பகம்

www.padippakam.com

## கவிதைப் பாடு

பன்னெடுங் காலம் மூடப்
பழக்கத்தைக் கடைப்பி டித்து
தன்னறி விழுந்தா னிங்கே
சிறப்படக் கவிதைப் பாடு .....!

கண்டதைக் கடவு ளாக்கிக்
காவுகள் கொடுத்து நாளும்
பின்னடை வானின் உள்ளம்
பிழையறக் கவிதைப் பாடு ....!

உருவிலாச் சாதிக் கிங்கே
உருவகங் கொடுத்தி வத்தில்
பிரிவுகள் செய்வான் சூது
பொடிப்படக் கவிதைப் பாடு .....!

பிறமொழி மயக்கத் தாலே
பைந்தமிழ்ச் சிறப்பைத் தூற்றிக்
கறைபட வைப்போர் ஈனக்
கருந்தறக் கவிதைப் பாடு .....!

பணம்பெற மடமை தன்னைப்
பாராட்டும் கவிஞ னோடு
கனவிலும் பழகி டாமல்
கவனமாய்க் கவிதைப் பாடு .....!

போர்பெற பேனா விங்கே
பிடிக்கிற கூட்டத் தோடு
சேர்வது பழியே யென்ற
சிந்தையில் கவிதைப் பாடு .....!

எத்தலை முறையும் ஏற்கும்
இலக்கியஞ் செய்வே னென்ற
முத்திரை முடிவில் பேனா
மூடியைத் திறக்கச் சொல்வீர் .....!

ம. அ. சந்திரன்
தாசேக் குளுகோர்,
மலேசியா.

www.padippakam.com

## உருக்கத்தின் இறுக்கங்கள் !

அருவிகளின்
மலர்ப்பாதங்களுக்கெல்லாம்
தன்னைத் தானே
தோண்டிக்கொண்டு
மல்லாந்து படுத்தே
அகழ்வார்களின்
இலக்குகளாகி
கரும்பாறை
கல்லாகி
மணலாகி
தூளாகி
காலப்போக்கில்
தம் தழும்புகளேயின்றி
அருவியோடு அருவியாகி
எதற்காக இந்தத்
திரிகளின்
நீடம் ?

ஏ. தேவராசன்
ஜாசின், மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# மானப்போர் என்று வெல்லும் ?

சொந்த நிலத்தில் அகதிககள்போல்
சுற்றும் ஈழச் சோதரர்கள்
நொந்த கோலம் பார்த்துள்ளம்
நொறுங்கி யாத்த கவிதையிது.....!

படிக்கும் பருவ மாணவர்கள்
பாழுந் துப்பாக் கித்தூக்கி
வெடிக்குங் கோரங் கண்டுள்ளம்
வெதும்பி வடித்த கவிதையிது.....!



மிருதுவான மலர்களெல்லாம்
வேங்கை யாகிப் போர்களத்தில்
பொருதும் வீரங் கண்டுள்ளம்
பொங்கி வார்த்த கவிதையிது.....!

இழந்த உரிமை தனை மீட்க
இமைமூ டாமல் காடுலவும்
புலிகள் திடத்தைப் பார்த்துள்ளம்
பொருமி வெடித்த கவிதையிது.....!

அன்னை வழியில் மகள் புரியும்
அநீதி எதிர்த்து உயிர்த்தியாகம்
பண்ணு வாரைப் பார்த்துள்ளம்
பதறிப் படைத்த கவிதையிது.....!

இதய மில்லா இனவாத
அரக்கர் கொடுமை தாங்காமல்
சிதைந்தார் வாட்டங் கண்டுள்ளம்
சினந்து செய்த கவிதையிது.....!

ஈழத் தமிழர் மானப்போர்
என்று வெல்லும் அன்றைக்கே
ஆழத் துயரை வீழ்த்திநானும்
அமைதி யான கவிவடிப்பேன்.....!

ம. அ. சந்திரன்
தாசேக் குளுகோர்,
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

நூறாண்டு தவம்செய்த முனிவர் கூட - சில
நொடிப்பொழுதில் சினம்வந்தால் பிறழக் கூடும்
நூறென்ன ஆயிரமோ சூழல் வந்தும் - தாங்கள்
நோகாமல் சினங்காக்கும் தன்மை விந்தை !

ஓர்நாளும் முகஞ்சுளித்துப் பார்த்ததே யில்லை - காதில்
ஒருவார்த்தை சூடாகக் கேட்டதே யில்லை !
மாறாத அன்பொன்றே மார்க்கம் என்பீர் - என்றும்
மகத்தான மானத்தை முதலாய்க் கொண்டீர் !

தீராத துயரெல்லாம் தங்கள் முன்னால் - சிறு
துகளுக்குச் சமமாகித் தொலைந்து போகும்
போராடும் மனத்தோடு தடையை வீழ்த்தி - வென்று
பொடியாக்கி உயர்வெய்த வாய்ச்சொல் ஊக்கும் !

யாரான போதென்ன அன்பைக் கொட்டி - சேர்ந்து
அனுதாபப் படுமாறு உள்ளம் கூறும் !
தாராள மனத்தோடு தாங்கள் போல - பிறர்க்குத்
தயைகாட்ட இணையாகக் காணேன் யாரும் !

யார்யார்க்கோ தாய்தந்தை அருகில் இருக்க - பாவம்
யானென்ன செய்தேனோ உம்மை இழக்க ?
வேறார்க்கும் வாய்க்காத தந்தை யன்றோ - தாங்கள்
மீண்டுவர வேண்டுகிறேன் மார்க்கம் உண்டோ ?

( ஜொக்கிரிதேவன் சோமசன்பார் )
குளுவாங் மலேசியா

www.padippakam.com

கல்யாணராமனின் இரு கவிதைகள்

## இதுவரை

ஒரு மாலை நேரத்தை
இப்படி நுகர்வதென்று
இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை

நதியில் குளிக்கப் பயம்
கால் நனையாமல்
கடற்கரைக்குப் போய்த் திரும்புகிற ரகம்

ஓவியம் பிடிபடுவதில்லை
சிற்பங்களின் நுணுக்கம் புரிவதில்லை
பயணங்களோ கூடி வருவதில்லை

கையில் குடை பிடிக்காமல்
மழையில் நனையும் மனம்
இன்னும் வாய்க்கவில்லை

கோலம் வியக்கத் தெரியவில்லை
வானம் பார்க்க ரசனையில்லை
நட்சத்திரங்கள் எண்ண முடியவில்லை
வசந்தத்தின் முதல் பூ
கண்ணிலேயே படுவதில்லை

திசைகள் பற்றியும் தெளிவில்லை
சிறகுகளுக்கும் சக்தியில்லை

விழக் காத்திருக்கும் பழத்துக்காய்
வீணே கல்லெறிதலே
விதிக்கப்பட்டிருக்கிறது எனக்கு

இந்தப் படுமோசமான வாழ்விலும்
ஒரே ஆறுதல்

மடியை நனைத்த எந்தக் குழந்தையையும்
கடிந்ததில்லை
இதுவரை.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழினம் எப்படித் தொடரும்

காலம்வரித்த கசப்பு நதியாய்க்
கண்ணீர்க் கோடுகள் நீளும்...
கரையில் மோதும் அலைகளோடு
புலம்பும் ஒவ்வொரு நாளும்...

ஓலம் காற்று வெளிகள் எங்கிலும்
உலகின் காதுகள் செவிடா?
உரிமை கேட்டுக் களத்தில் நிற்பது
வரலாறு செய்கிற தவறா?

மூண்ட தீயின் கொழுந்துகளில் எங்கள்
முகங்கள் எரிகிறபோது
நீண்ட கைகள் முடங்கினால் உலகில்
நீதி நியாயம் எது?

கட்டடம் சிதைந்த கல்லில் புழுதியில்
கள்ளியும் எருக்கும் படரும்!
தொட்டில்கள் மூழ்கும் குருதிச் சகதியில் -
தமிழினம் எப்படித் தொடரும்?

காணாமற் போவதோ தமிழினம் என்ற
கவலை இல்லையோ யார்க்கும்?
பேணாமற் போயினர் விடுதலைப் போரினை
எதிர்காலம் இப்படிக் கேட்கும்!

ஒற்றுமை கொள்ளட்டும் உலகத் தமிழினம்
மீட்சிக்கான ஒரு செயலில்,
உற்றுக் கேட்கட்டும் உலக மனச்சாட்சி
உரிமைக்கான போர்க்குரலை!

இன்குலாப்

நன்றி
3-7 'இனி' சூலை '96 - 15

படிப்பகம்

www.padippakam.com

# இறவாது மரபு !

வாஞ்சிதேவன் சோமசான்மா
குளுவாங், மலேசியா

பெண் :
விலகாது விழிகொண்டு
விலங்கிட்டுப் பார்த்தாலே
இளகாதோ உள்ளம்தான் கண்ணா - நாணம்
அழைக்காத பெண்ணென்ன பெண்ணா ?

ஆண் :
உனைக்கண்ட கண்ணுக்கு
இமைகின்ற மனமில்லை
எனைக்காக்க அணையேது பெண்ணே - தடை
இனியேனும் விலகட்டும் கண்ணே !

பெண் :
மணங்கொண்ட நன்னாளில்
மகிழ்வோடு நாளெல்லாம்
மனம்போல பாருங்கள் பெண்ணை - நானும்
மறுக்காமல் தருகின்றேன் என்னை !

ஆண் :
இனிக்கின்ற சொல்லாலே
அலைபாயும் மனம்தேற்றி
தணித்தாயென் காதல்தீ அன்பே - உந்தன்
தமிழ்பண்பின் முன்யாவும் பின்பே !

இருவர் :
அயலென்ப தொன்றாகி
அன்புக்குள் நின்றேகி
உயர்காதல் மாண்பென்றும் காப்போம் - நம்
உறவுக்குள் புனிதங்கள் சேர்ப்போம் !

படிப்பகம்

அழி............

நீரோட்ட வாழ்க்கை
நேர்ந்து விட்ட
சேவல் போல......


காலனின் கைவலை
நீயும் நானும்
இன்றோ
நாளையோ.......?

மனத் தேர்
தவளையெனக்
குதியடா குதி.

நாளை கட்டியழ
உனக்கும் இருப்பர்
இருபது பேர்கள்.

கு. வேலுச்சாமி
பாலோங், மலேசியா.

www.padippakam.com



# தேடல்

தங்கத் தமிழினம் தேடிற்று
ஈழத் தமிழினம் சீறிற்று

உரிமைத் தேடலில்
போரை முன்னுரையாக்கி
ஈழத் தமிழினம் தேடிற்று

புல்லணை ..................
புண்ணாக்கும் நோக்கில்
புல்லர்கள் ஓடினர் .......
இன்று.....
தமிழன் கைகளிலெல்லாம் புண் !

செல்லாக் காசு பேச்சில்
செலவழிந்த ஆற்றல்....
நம்பியே.....
நம் கை அறுத்துக் கொண்டோம் !

தற்கொலைக்காக
தலை விற்கும் கொடுமை
எல்லாம் ஆயிற்று
எதுவுமே முடியவில்லை

எங்கெங்கு திரும்பினும்
எதுவுமே எனதல்ல.....
இன்று.....
முனகலோடு தமிழன்
முச்சந்தி வாழ்வுக்காய் !

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்.

படிப்பகம்

www.padippakam.com

செலவு

புதிய வாகனம்
நன்றாக ஓடுகிறது
கடனில் !

அன்(ம்)பு

அழகாய் வரையும் சிறுமி
மீசை முளைத்தப்படி அம்மா புகைப்படம்
"ஓவர் டைம்மில்" அம்மா !

ஈழம்

புல் தின்னும் "அப்பாவிப் புலிகள் "
"படம்" பிடிக்கும் கருணை உலகம்
எல்லாம் நல்ல பாம்புகள் !

பொருப்பு

குழாய் நீர் காலி
சொட்டுகளைத் தேடும் குடும்பம்
குடித்துத் தீர்த்த அப்பா !

ஏ. தேவராசன்
ஜாசின், மலேசியா.

www.padippakam.com

# மூச்சு விடுவோம் !

மூலைமுடுக்கெல்லாம்
இருள் !
சுகமான சுத்திகரிப்பில்
அறிவின் வேசுல் !

மெதுவாய் நகரும் ஆமை
ஓடுகளை நம்பியே !

மெல்ல வீசும் தென்றல்
இதயங்களை நம்பியே !

பாத்திரமெல்லாம்
பகல் நிலாக்கள் !
காணமற் போகும்
சோற்றுப் பருக்கைகள் !

முக்காடுப் போட்டு
உறங்கும் மனிதன்.....
மெல்ல எழுவான்
தன்னைத் தொலைத்துக்கொண்டே !

மெல்ல சிரிப்பான்
உயர்ந்த கோபத்தில்.....
தன்னை மூடிய.....
மான் தோல் !

மனித இறைச்சியை
உண்ணும் மனிதன்
காலடிக்குள் மிதிபடும்
மனிதன் !

கல்லாகிப் போன மனங்கள்
நாற்றத்தை முகர்ந்து கொண்டே
விழிக்கும் மூக்கு !

ஓ ! மனிதக் காலடிக்குள்
மறைந்து போகும் உறவுகள் !
மெல்ல மெல்ல
உலர்ந்து காயும் சிந்தனைகள்
கம்பிகளில் தொங்கும்
வாரிசுகள் !

எங்களிடம்.....
எல்லாமும் உண்டு !
எங்களைத் தவிர.....

சீ. அருணாசலம்
பகாங், மலேசியா

www.padippakam.com

1000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட
கொரிய நாட்டுக் கவிதை ?

**வேசி...**

ரொட்டிக் கடைக்குப் போகிறேன்
ரொட்டி ஒன்று வாங்குகிறேன்
கிழட்டு ரொட்டிக் கடைக்காரர்
என் கையைப் பிடிக்கிறார்.
இந்தக் கதை வெளியே தெரிந்தால்
சிறு பெண்ணே, பழி உனக்குத்தான்
ஆம், ஆம் அவரது
தோட்டக் குடிலுக்குப் போவேன் - ரகசியமாக !

கோவிலுக்குப் போகிறேன்
விளக்கை ஏற்றுகிறேன்
பெரிய குருக்கள் என்
என் கையைப் பிடிக்கிறார்
இந்தக் கதை வெளியே தெரிந்தால்
கற்றுக் குட்டியே, பழி உனக்குத்தான்
ஆம், ஆம் அவரது
தோட்டக் குடிலுக்குப் போவேன் - ரகசியமாக !
..........

படிப்பகம்

www.padippakam.com

மார்க்கம் உண்டோ ?

கண்ணுக்கு எட்டாத தூரம் சென்றும் - எந்தன்
கருத்துக்குள் உறைகின்றீர் நீங்க ளின்றும்
மண்ணுக்குள் மறைந்திட்ட காலந் தொட்டு - நானும்
மௌனத்தால் அழுகின்றேன் உள்ளம் விட்டு !

இன்றைக்குப் புகழேய்தி நானும் உயர்ந்து - நிற்க
உழைத்திட்டீர் விடுப்பின்றி எல்லை கடந்து
நன்றிக்குக் கடன்செய்யும் காலம் கனிந்து - வந்த
நாள்பார்த்துப் பிரிந்தீரே என்னை மறந்து !

தாரொன்றே தருகின்ற வாழை போல - அன்புத்
தாயார்க்குத் தனியாகப் பிறந்த நீங்கள்
ஊராரின் பார்வைக்கு கவிஞர் மட்டும் - எந்தன்
உள்ளத்தின் பார்வைக்குத் தெய்வம் என்பேன் !

ஈரெட்டுச் செல்வங்கள் தழைக்கச் செய்ய - வாழ்வில்
எண்ணற்ற துயரெல்லாம் உற்ற நீங்கள்
சேர்த்திட்ட செல்வங்கள் பணங்கா சல்ல - நிலைக்கும்
செகம்போல் புகழோச்சும் பெயரல் லவா ?

படிப்பகம்

www.padippakam.com



# மறந்திட்ட மனிதர்கள்...!

கடையிலே சப்பாத்து
கண்ணைப் பறிக்குது...
காசைக் கொடுத்து
காலிலே மாட்டினால்...
காலைக் கடிக்குது.

ஓ! மனிதன் தன்
அளவை மறந்நானா!

குதிரையின் நினைப்போ...
மனிதனை சுமப்பதாய்...
மனிதனின் நினைப்போ...
குதிரையை சுமப்பதாய்...

ஓ! மனிதன் தன்
இருக்கையை மறந்தானா!

பசுவின் நினைப்போ...
பாலைக் கொடுப்பதாய்...
மனிதன் நினைப்போ...
பாலையெடுப்பதாய்...

மனிதன் தன் மனிதத்தை மறந்தானா!

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்.

படிப்பகம்

www.padippakam.com



# புதிய பூபாளம்

ஒரு
புல்லாங்குழல் பாடப்
புறப்பட்டு
புரையோடிப் போன
இளையவனே
என் இனிய
தமிழனே

வாழ்க்கை வகிடெடுப்பில்
முகவரிகளை மறந்த
முக வரிகள்
நீ
நான்
நாம்

நாளைய
நன்னம்பிக்கை முனையை
அடைய
புதிய கைத்தடிகளுடன்
வழிகாட்டிகளாய்ப்
புறப்படுவோம்
இனி!

எந்த
எதிர்ப்பு வெள்ளத்திலும்
கை குலுக்கிக் காட்டுவோம்
கரைகளாய் இருந்து
சிறு விதைக்குள்தான்
ஆலமரங்கள்
இருக்கின்றன

வா தமிழனே

நாட்கள் இன்னும்
நந்தவனமாகவே
இருக்கின்றன.

கு. வேலுச்சாமி
பாலோங், மலேசியா.


படிப்பகம்

www.padippakam.com

## வறுமை ஒழிந்து

"அரசியல் மேடைகளில்
வறுமை ஒழிக எனச்
சில ஆண்டுகள்
வாயார முழங்கினேன்
இன்று,
வறுமை ஒழிந்து
வசதியாக வாழ்கிறேன்!"

- 'அகரம்'





## சலுகைகள்

"ஏழைகளுக்கு
கடன் உதவி
கடன் நிவாரணம்
இலவச உணவு
இலவச உடை
அடேயப்பா!
ஏழைகள்,
ஏழைகளாகவே இருக்க
எத்தனை சலுகைகள்"

- 'அகரம்'

நன்றி
உண்மை
டிசம்பர் 96

படிப்பகம்

www.padippakam.com

நம்பிக்கை !

நாங்கள்
மொட்டு விட்டு
மலரும் ரோஜாக்கள்

சூரிய ஒளியில்
சுகம் தேடி
காலைப் பனியில்
காதல் பேசும்
கவிதைப் பூக்கள் !

ஆயிரம் மனங்களுக்கு
அன்பை
அள்ளிக் கொடுப்போம் !


சாகா வரம் பெற்று
சரித்திரம் செய்யவே
சலிக்காமல் உழைப்போம் !

தளரும் கைகளை
தூக்கிப் பிடிப்போம்
துரோகச் செயல்களை
தூக்கி எறிந்து
அருவியாய் பாய்ந்து
அகிலத்தை ஆள்வோம்.

வெ. தேவராசுலு
பினாங்கு, மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com



# நெருப்பை எரித்திடுவோம் !

பகல் கனவுகளில்
வேகும் இயற்கை !

மிதியடிகளை மிதிக்கும்
கால்கள் !

நெருப்பை எரிக்க
தோளுயர்த்தும் சூரியன்கள் !

சுமைகளே
சுமைகளைச் சுமப்பது

சாலைகளே
நடப்பதா ......

இனி
நாமும் விழித்தெழுவோம் !

ஒரு சூரிய ஒளிக்காக
சுமை தூக்குவோம் !

நெருப்பை எரிக்க
நம்மை நாமே
சூரியன்களாக்குவோம்!

கோபப் பெருமூச்சில்
கொந்தளித்தெழுவோம் !

நமக்கும்....
சூடு
சொரணை, மானம்
எல்லாம் உண்டு !

சும்மாயிருக்கும்
சுமைகளை தகர்த்தெறிவோம் !
நாளைய சூரியனுக்கு இன்றே
ஒளி சேகரிப்போம் !

இந்த நூற்றாண்டு
சிந்தனை மலர்ச்சியில்
படுத்துறங்கும் இளைஞர்களை
துமிக்கியால் எழுப்பிடுவோம் !

சீ. அருணாசலம்
பகாவ்,
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# சின்னஞ்சிறு கவிக்குஞ்சுகள்

அட பக்தா ?

தவளையைத் தேடி
புற்றுகுள்ளிருந்த பாம்பு
வெளியே பால் !

விபத்து

சாலை விபத்தில்
செத்துப் போனது
அலட்சியம் !

முரண்

மனைவி வேலக்குச் சென்றதால்
கிடைத்தது சமையல் இயந்திரம்
அடுக்களையில் கணவன் !

உறவு

சாப்பிடும்போதெல்லாம்
தெய்வத்தை நினைப்பதுண்டு
உருண்டையைப் பிடித்தப்படி அம்மா !

படிப்பகம்

www.padippakam.com

## நன்றி நவிலல்

குழந்தைகள் விரும்பப்படுவதையெல்லாம்
முகம் கோணாமல் வாங்கித் தாருங்கள்

குருட்டுக் கிழவி சாலை கடக்க
தயவு செய்து உதவுங்கள்

கோவில் வாசல் பிச்சைக்காரனின்
தகரக் குவளையில்
"ஓசையெழுப்பாத பத்து ரூபாய் நோட்டை
யோசிக்காமல் போடுங்கள்

இன்னொரு நாள்
அது குறிஞ்சிப் பூவானாலும் வேண்டாம்
செடியிலேயே இருக்க விடுங்கள்

எதிர்வருவோர் பரம வைரியேயானாலும்
பகை மறந்து
உதடு விரிய புன்முறுவல் செய்து
கரம் குலுக்கிக் கொள்ளுங்கள்.


திருடர்களே! கொலைஞர்களே!
பாதம் தொட்டுக் கேட்கிறேன்
ஒத்திப் போடுங்கள்.
நம் மாமூல் கச்சேரிகளை

கொட்டட்டும் வானம்
பூத்துக் குலுங்கட்டும் பூமி

என்னைக் காதலிப்பதாய் சொன்னவளின்
சார்பில்
உங்களுக்கெல்லாம் ஒரு நன்றி
இந்த மகத்தான நாளைக் கொண்டாடியதற்காக.

படிப்பகம்

www.padippakam.com







## புதுவைக் குயிலுக்கே முதல் வணக்கம்

நாவிற்குச் சுவையூட்டும்
நற்றமிழ்ச் சொல்லடுக்கால்
பாவிற்கே உயிர் ஊட்டும்
பாரதி தாசனவர்!
சாவிற்கே அறைகூவல்
தந்தாரே தம்பாட்டால்!
கூவிவந்த தமிழ்ச்சேவல்
கோவிற்கே முதல் வணக்கம்!

தமிழ்த்தாய்க்கும் தாழ்ந்துவரும்
தன்னின மக்களுக்கும்
இமையானார் பாவேந்தர்;
இசைந்துவந்தார் கொள்கையெல்லாம்!
அமிழ்தான பாக்களினால்
அமிழாமல் இனம்காத்தார்
நமையெழுப்பும் புதுவைக்குயில்
நல்லோர்க்கே முதல்வணக்கம்!

படிப்பகம்

www.padippakam.com

சந்தக் கவிஞர் தமிழ்மறவனின் கவிதைகள் என்ற கவிதைத் தொகுப்பை படித்தப்பின் நமக்கு தோன்றுவது ;

* நாம் முதலில் உணர வேண்டும் ; பிறகு உணர்த்த வேண்டும்
* தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவனுக்கோர் குணமுண்டு
* ஒரு சமுதாயத்தின் சிக்கல்களை ஒரு படைப்பாளியைத் தவிர வேரெவர் முழுமையாகத் தெரிவிக்க முடியும்?
* மனிதன் போராட்டத்திற்காகப் படைக்கப்பட்டுள்ளான். ஆகவே, அவன் எப்படியாவது போராடித்தான் வாழ வேண்டும்.
* படைப்பாற்றலை படைப்பாளி இறைமையின் ஈதலாக எண்ண வேண்டும்.

இன்னும் எத்தனையோ.

இவ்வரிய நூலை ம.ரி.10.00 அனுப்பி கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சந்தக் கவிஞர் தமிழ்மறவனார்
1408 B, BATU 6,
JALAN PUCHONG,
PETALING,
58200 KUALA LUMPUR
MALAYSIA.

படிப்பகம்

www.padippakam.com

## உருண்டை உலகம்

அது
நஞ்சு மரந்தான்
நகைப்பிலும்
நெஞ்சை மெல்லும்
நாகரீக மரம் !

நிழல் கொடுத்து
நீள் விழியில்
நெஞ்சை பிழிந்து
நிறத்தைக் கொடுத்ததும்.....
அதே மரந்தான் !


காவி கொடுத்து
காதலைத் தொடுத்து
பருவத்தில் நீ பாடிய
பாடலைக் கேட்டு
சூல் கொண்டு
சுகமான
உறவைத் தேடி
தொட்டுத் தொட்டு
உன்னை தோலுரித்ததும்
அதே மரந்தான் !

சோகங்களை வேதமாக்கி
விளக்கம் தேடி
வெளிச்சத்தைப் பறிகொடுத்ததும்
அதே மரந்தான் !

வெ. தேவராசு
பினாங்கு, மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com




எல்லாரும் நல்லவர்களே
தீயவர்களைத் தவிர....

எல்லார்க்கும் வாழ்வுண்டு
இறந்தவனைத் தவிர.....

மீள்பார்வை முறையீட்டில்
வெந்துப்போன உரிமைகள்....


நாமெல்லாம் நல்லவர்கள்....
வல்லவர்கள்.....
சுடாத சூரியக் குழந்தைகள் !

இந்த இனத்திற்கு
என்ன வேண்டும்....
நல்ல கேள்விதான்
எதுவுமே இல்லாதபோது
எதைக் கேட்பது......
எதை விடுவது !
ஒன்று கேட்கட்டுமா.....
எங்களுக்கு விடியல் வேண்டும் !
அதற்காய்
சுடப்புறப்பட்ட சூரியனாய்
நான்.....
நாங்கள் !!!

மயில்வாகனம்
மலேசியா..

படிப்பகம்

www.padippakam.com



ARUVI
425 TAMAN SRI MAHSAN
72100 BAHAU
NEGERI SEMBILAN
MALAYSIA

படிப்பகம்